1982 பிப்ரவரி 10]

*வினா எண். 140 .— திரு. இரா. தாமரைக்கனி : மாண்பு மிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா —

புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பு ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசு ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஆம். புதுக் கோட்டை மாவட்டத்தில் சுமார் ஏழுகோடி ரூபாய் செலவில் ஒரு நூற்பு ஆலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

டாக்டர் கே. சமரரம் : தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் ஒரு நூற்பாலை ஏற்படுத்த அரசு தீர்மானித்து உள்ளது என்பதற்கு நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த நூற்பாலையை எங்கே அமைக்கத் தீர் மானிக்கப்பட்டுள்ளது ? தருமபுரி மாவட்டத்தில் எந்தவித தொழில்களும் இல்லாத காவேரிப்பட்டிணம் தொகுதியில் அதை ஏற்படுத்த அரசு முயற்சிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் கீழ் ஒரு குழு இடம் தேர்வு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ளது அந்தப் பணிகள் நடை பெற்று வருகின்றன எனவே அதற்குப் பின்னாலே அரசு எந்த இடத்தில் அமைப்பது என்பதைப் பற்றி முடிவு செய்யும் இப்போது அந்த மாவட்டத்தில் அமைப்பது என்பதை மட்டும் உறுதி செய்ய இயலும்

திரு. இரா தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை ஆரம்பிப் பதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்து முடிந்து விட்டதா ? நிலம் ஆர்ஜிதம் செய்து விட்டதால் அங்கே தங்களுடைய நிலத்தைக் கொடுத்தவர்களுக்கு அந்த நூற்பாலையில் வேலை வாய்ப்பு அளிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. எஸ் திருநாவுக்கரசு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் நில ஆர்ஜிதம் செய்யப்பட்டு விட்டது இடம் தேர்வு செய்யப் பட்டுவிட்டது ஆரம்ப வேலைகள் இன்னும் சில மாதங்களில் முடிவு பெறும் வேலைக்கு ஆட்கள் எடுக்கின்றபோது குறிப்பாக நிலம் கொடுத்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

திரு. இரா தாமரைக்கனி : தலைவர் அவர்களே, புதுக் கோட்டை மாவட்டத்தில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக் கும் ஆலங் குடியில் அந்த நூற்பாலையை அமைக்க அரசு முன் வருமா ?

[1982 பிப்ரவரி 10

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே நான் ஏற்கனவே சொன்னேன். ஏற்கனவே இடம் தேர்ந்தெடுக்கப்பட்டு விட்டது.

திரு. பி. எஸ். துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி மாவட்டத்தில் நூற்பாலை அமைக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். தருமபுரிக்குப் பக்கத்தில் நான்கைந்து நூற்பாலைகள் ஏற்கனவே இருக்கின்றன. ஆகவே, பர்கூரில் அந்த நூற்பாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவர் அவர்களே, கூட்டுறவு நூற்பாலை இல்லாத மாவட்டங்களில் ஒரு நூற்பாலை ஆரம்பிப்பது என்கிற அடிப்படையில் புதுக்கோட்டை, தருமபுரி மாவட்டங்களில் நூற்பாலை அமைக்க முடிவு செய்துள்ளோம். தருமபுரி மாவட்டத்தில் தனியார் துறையில் நூற்பாலைகள் இருந்தாலும், கூட்டுறவு நூற்பாலை இல்லை. அந்த மாவட்டத்தில் எந்த இடத்தில் அந்த நூற்பாலையை அமைப்பது என்பது குறித்து முடிவு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் இடத்தைத் தேர்வு செய்து அறிவித்தவுடன் அந்த நூற்பாலை எங்கே அமைப்பது என்பது குறித்துப் பின்னால் முடிவு செய்யப்படும்.

திரு. ராஜ்குமார் விஜயரகுநாத தொண்டமான் : தலைவர் அவர்களே புதுக்கோட்டை மாவட்டத்தில் கூட்டுறவு நூற்பாலை அமைப்பதற்கு முடிவு செய்ததற்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கூட்டுறவு நூற்பாலை எத்தனை ஸ்பின்டில்ஸை வைத்து நடத்தப்போகிறார்கள். எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்பதை அறிவிக்க இயலுமா? அதோடு அதற்குபக்கத்திலே தனியார் துறையில் இருக்கக்கூடிய காவிரி நூற்பாலையை அரசு ஏற்று நடத்தி வருகிறது. அது அரசாங்கத்தால் முழுமையாக, தேசியமயமாக்கப்பட்டு நடத்தப்பட்டால், காவிரி நூற்பாலை நிற்காமல் ஓடிக்கொண்டு இருக்கும் என்று நம்பிக்கை இருக்கிறது. ஆகவே, அரசு அதைச் செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே 25,000 கதிர்த் திறன் (ஸ்பின்டில்ஸ்) கொண்ட கூட்டுறவு நூற்பாலை அமைக்கும் திட்டம் இருக்கிறது. முதலில் 12,500 கதிர்த்திறன் கொண்ட நூற்பாலை தொடங்கப்படும். நூற்பாலை அமைக்கப்படும் இடம் புதுகோட்டை என்று சொல்லவில்லை. புதுக்கோட்டை மாவட்டம் என்று சொன்னேன். காவேரி நூற்பாலையைப் பொறுத்தவரையில் தனியாகக் கேள்வி போட்டால் விவரமாகப் பதில் சொல்கிறேன்.

1982 பிப்ரவரி 10]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

2 தகவல் கோரல்.

(அ) மின் கட்டணம் செலுத்துவது பற்றிய புதிய முறை.

திரு. ப. பொன்னுரங்கம் தலைவரவர்களே, நான் ஒரு ஒழுங்குப் பிரச்னை எழுப்புகிறேன் மின் கட்டணம் செலுத்துவது பற்றிய பிரச்சனை இது மின் கட்டணம் செலுத்துவதில் இந்த மாதம் முதல் ஒரு புதிய முறையை நடைமுறைப்படுத்தியிருக்கிறார்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மின்சார வாரியம் பற்றிய விவாதம் வரும்போது அதுபற்றிப் பேசலாம் ; உட்காருங்கள்

(ஆ) இசைவு மறுக்கப்பெற்ற உரிமைப் பிரச்சினை

திரு. அ. ரகுமான்கான் மாண்புமிகு தலைவரவர்களே, ஒரு முக்கியமான ஒழுங்குப் பிரச்சினையை எழுப்ப விரும்புகிறேன் * * * *

மாண்புமிகு பேரவைத் தலைவர் : **** உங்கள் உரிமைப் பிரச்சனைக்கு நான் 'கன்செண்ட்' கொடுக்கவில்லை

திரு. அ. ரகுமான்கான் : *****

திரு. துரைமுருகன் : *****

மாண்புமிகு பேரவைத் தலைவர் நீங்கள் கொடுத்திருந்த அவை உரிமைப் பிரச்னையை அவையில் எடுத்துக்கொள்ள அனுமதி மறுத்திருக்கிறேன் அதைப் பற்றி இங்கே பேசக்கூடாது என்னுடைய அறையில் வந்து கேட்க வேண்டும் இப்போது; நீங்கள் சொல்வது எல்லாம் அவைக் குறிப்பில் ஏறாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் அனுமதிக்கவில்லை என்று சொல்லிவிட்டேன் காரணத்தை அறையில் வந்து கேளுங்கள் * * * *

** மாண்புமிகு பேரவைத தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது